# பெரியாழ்வார் திருமொழி 1-3
## மாணிக்கம் கட்டி
(கண்ணனைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுதல்: தாலப்பருவம்)

44 * மாணிக்கம் கட்டி * வயிரம் இடைகட்டி *
ஆணிப்பொன்னால் செய்த * வண்ணச் சிறுத் தொட்டில் **
பேணி உனக்குப் * பிரமன் விடு தந்தான் *
மாணிக் குறளனே தாலேலோ * வையம் அளந்தானே
தாலேலோ (1)

45 உடையார் கனமணியோடு * ஒண் மாதுளம்பூ *
இடைவிரவிக் கோத்த * எழில் தெழ்கினோடு **
விடையேறு காபாலி * ஈசன் விடு தந்தான் *
உடையாய் அழேல் அழேல் தாலேலோ * உலகம்
அளந்தானே தாலேலோ (2)

46 என் தம்பிரானார் * எழில் திருமார்வர்க்கு *
சந்தம் அழகிய * தாமரைத் தாளர்க்கு **
இந்திரன் தானும் * எழிலுடைக் கிண்கிணி *
தந்துவனாய் நின்றான் தாலேலோ * தாமரைக் கண்ணனே
தாலேலோ (3)

47 சங்கின் வலம்புரியும் * சேவடிக் கிண்கிணியும் *
அங்கைச் சரிவளையும் * நாணும் அரைத் தொடரும் **
அங்கண் விசும்பில் * அமரர்கள் போத்தந்தார் *
செங்கண் கருமுகிலே தாலேலோ * தேவகி சிங்கமே
தாலேலோ (4)

48 எழிலார் திருமார்வுக்கு * ஏற்கும் இவையென்று *
அழகிய ஐம்படையும் * ஆரமும் கொண்டு **
வழுவில் கொடையான் * வயிச் சிரவணன் *
தொழுதுவனாய் நின்றான் தாலேலோ * தூமணி வண்ணனே
தாலேலோ (5)

49 ஓதக் கடலின் * ஒளிமுத்தின் ஆரமும் *
சாதிப் பவளமும் * சந்தச் சரிவளையும் **
மாதக்கவென்று * வருணன் விடுதந்தான் *
சோதிச் சுடர் முடியாய் தாலேலோ * சுந்தரத் தோளனே
தாலேலோ (6)

50 கானார் நறுந்துழாய் * கைசெய்த கண்ணியும் *
வானார் செழுஞ் சோலைக் * கற்பகத்தின் வாசிகையும் **
தேனார் மலர்மேல் * திருமங்கை போத்தந்தாள் *
கோனே அழேல் அழேல் தாலேலோ * குடந்தைக்
கிடந்தானே தாலேலோ (7)

51 கச்சொடு பொற்சுரிகை * காம்பு கனவளை *
உச்சிமணிச் சுட்டி * ஒண்தாள் நிரைப் பொற்பூ **
அச்சுதனுக்கென்று * அவனியாள் போத்தந்தாள் *
நச்சு முலையுண்டாய் தாலேலோ * நாராயணா அழேல்
தாலேலோ (8)

52 மெய்திமிரும் நானப் * பொடியோடு மஞ்சளும் *
செய்ய தடங்கண்ணுக்கு * அஞ்சனமும் சிந்துரமும் **
வெய்யகலைப்பாகி * கொண்டுவளாய் நின்றாள் *
அய்யா அழேல் அழேல் தாலேலோ *
அரங்கத்தணையானே தாலேலோ (9)

53 * வஞ்சனையால் வந்த * பேய்ச்சி முலையுண்ட *
அஞ்சன வண்ணனை * ஆய்ச்சி தாலாட்டிய **
செஞ்சொல் மறையவர் * சேர் புதுவைப் பட்டன் சொல் *
எஞ்சாமை வல்லவர்க்கு * இல்லை இடர் தானே (10)